செய்தி வெளியீடு எண். 210 நாள்: 19.04.2017

**திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், வெங்கடாபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 326 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்தி 84 ஆயிரத்தி 900 –க்கான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், வெங்கடாபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.04.2017) 326 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்தி 84 ஆயிரத்தி 900 –க்கான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் பல்வேறு துறைகளின் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இதில் சுகாதார துறை, கல்வித்துறை, சமூக நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, செய்தி மக்கள் தொடர்பு துறை, கூட்டுறவுத்துறை ஆகிய துறைகளின் சார்பாக அரங்குகளில் சிறு கண்காட்சி அமைக்கப்பட்டு அந்தந்தத் துறை சார்பாக அரசு வழங்கும் நலத்திட்டங்கள் குறித்து அரசுத் துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கூறுகையில், “திருவள்ளூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அடித்தட்டு மக்களுக்கும் அதிக சேவை வழங்கும் அம்மா திட்டம் நடத்தப்பட்டு மனுக்களை பெற்று உரிய தீர்வுகள் வழங்கப்படுகிறது. மக்களின் குறைகளை பூர்த்தி செய்ய அரசே மக்களை தேடி அவர்களது கிராம ஊராட்சியில் மனுக்களை பெற்று அதற்கு தகுந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதுபோன்ற மக்கள் தொடர்பு திட்ட முகாம் மூலம் அரசின் நலத்திட்டங்கள் மக்களுக்கு நேரடியாக கொண்டுசெல்லப்படுகிறது. மக்கள் அனைத்து அரசு நலத்திட்டங்களை பற்றியும் அவற்றை எவ்வாறு பெற வேண்டும் என்பதை பற்றியும் இதன் மூலம் முழுமையாக தெரிந்து கொள்ளலாம்.

கடந்த 2,3 நாட்களாக வெய்லின் தாக்கம் அதிகமாக உள்ளதால் தாகம் வரும் வரை காத்திராமல் அடிக்கடி தண்ணீர் அதிகளவில் பருக வேண்டும். சாறு நிறைந்த பழங்களை அதிக அளவில் உட்கொள்ள வேண்டும், கனமான ஆடைகளை தவிர்த்து மெல்லிய பருத்தி ஆடைகளை அணியலாம். விவசாயிகள் தங்கள் கால்நடைகளை நிழலான இடங்களில் தங்க வைப்பதோடு அவற்றிற்கு தேவையான அளவு தண்ணீரை வழங்கிட வேண்டும். பொதுமக்கள் அவசிய தேவையின்றி வெயிலில் செல்ல வேண்டாம். குறிப்பாக நண்பகல் 12.00 மணி முதல் 03.00 வரை வெளியில் செல்வதை தவிர்ப்பது நல்லது. உப்பு-சர்க்கரை கரைசல் அருந்துவது நல்லது. குடிநீர் தொடர்பான புகார்களை பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம். இந்த புகார்கள் 5-6 மணி நேரத்திற்குள் சரிசெய்யப்படும். சீமை கருவேல மரங்களை வேரோடு அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. நிலத்தடி நீரை உறிஞ்சி மற்ற செடிகளை வளர விடாமல் தடுக்கும் சீமை கருவேல மரங்களை வேரோடு அகற்றுவதற்கு மக்கள் அரசிற்கு ஒத்துழைப்பு தரவேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஏப்ரல் 1-ம் தேதி மின்னணு குடும்ப அட்டைகள் (Smart Card) வழங்குவதை துவக்கி வைத்தார். அதைத்தொடர்ந்து இதுவரை 27 ஆயிரம் குடும்ப அட்டைகள் பெறப்பட்டு மேலும் 56 ஆயிரம் குடும்ப அட்டைகள் பெறப்பட்டுள்ளது. இந்த குடும்ப அட்டைகளை பொதுமக்கள் தங்கள் கைபேசிகளில் குறுஞ்செய்திகள் பெறப்பட்டவுடன் அதனைக்கொண்டு புதிய மின்னணு அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம். மாவட்டத்தில் 58 சதவிகிதம் மழைக்குறைவாக பெய்துள்ளது, அனைத்து ஊராட்சிகளிலும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் காலை மற்றும் மாலை வேளைகளில் வழங்கப்படுகிறது. அனைவரும் தேவைக்கேற்ப தண்ணீரை பயன்படுத்தி தண்ணீரை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக கால்நடைகளுக்கு வழங்கப்படும் உலர்தீவனம் வழங்குவதற்கு மாற்றாக அசோலா (Asola) தீவனங்களை வழங்கலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த குடிமராமத்து திட்டம் மூலம் கோடைக்காலங்களில் ஏரி மற்றும் ஆற்றுப்படுக்கைகளை தூர்வாரும் பணிகளை ரூ.100 கோடி மதிப்பீட்டில் துவக்கி வைத்தார். தங்கள் ஊராட்சிகளில் உள்ள ஏரிகளை தூர்வாருவதற்கு பொதுப்பணித்துறையை அணுகி குழு அமைத்து அதற்குரிய நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து 75-க்கும் மேற்பட்ட மனுக்களை நேரில் பெற்றுக் கொண்டு, அதற்கு உரிய தீர்வுகளை விரைந்து வழங்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன், திருவள்ளூர்-காஞ்சிபுரம் ஆவின் கூட்டுறவுத் தலைவர் திரு.சந்திரன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.விமல்ராஜ், திருத்தணி வட்டாட்சியர் திரு.தி.பரணிதரன், தனி வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~